**CC. 268/2025 (PW. 2 )**
**அ.சா. 2 ரெக்குபிள்ளை**
**த/பெ.**
**நாள். 14.05.2026**

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். பிரிவு குவிமுச 311/ 348 BNSS –ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு அரசு தரப்பில் மறுவிசாரணை.
( எதிரி ஆஜர் ).

**எ.த.கு.வி:–**

அசா.1 எனது அம்மா ஆவார். ஆஜர் எதிரி எனது தாய்மாமானின் மருமகன் ஆவார். சம்பவம் நடந்த இடத்திற்கு எதிரியின் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்திற்கு எதிரியின் மனைவியின் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரியல்ல. எதிரி வெளியூரில் இருப்பதால் அவரது இடத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவர் மீது பொய்யான வழக்கை தொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரியின் இடத்திற்கு சென்று நாங்கள் தான் அடிக்கடி பிரச்சினை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல அவர்தான் கடலை செடிகளை பிடுங்கி எறிந்து விட்டார். ஆஜர் எதிரி எங்களை தாக்கவில்லை என்றும், எங்களை ஆபாசமாக பேசவில்லை என்றும், எங்களை கொலைமிரட்டல் எதுவும் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் நடைபெற்ற போது எங்கள் ஊர் பஞ்சாயத்து தலைவர் அப்போது அங்கு இருந்தாரா என்றால் அப்போது அவர் அங்கு இல்லை.எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**

CC. 268/2025 (PW. 1 )
அ.சா. 1 பேச்சியம்மாள்
த/பெ.
நாள். 14.05.2026

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். பிரிவு குவிமுச 311/ 348 BNSS –ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு அரசு தரப்பில் மறுவிசாரணை.
( எதிரி ஆஜர் ).

எ.த.கு.வி:–

சம்பவ இடத்திற்கு பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் எனது அப்பா பெயரில் இருந்தது. எனது அப்பா இறந்து சுமார் 50 வருடம் ஆகிறது. எனது அப்பா இறந்த பிறகு மேற்படி இடம் எனது அண்ணனிற்கு சட்டப்படி சென்று விட்டது என்றால் சரிதான். மேற்படி இடத்திற்கும் எனக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. மேற்படி இடம் எனது அண்ணன் இறந்த பிறகு அவரது ஒரே வாரிசான அவரது மகளிற்கு சென்றுவிட்டது என்றால் சரிதான். எனது அண்ணன் மகளை தான் ஆஜர் எதிரி திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது அண்ணன் மகள் சம்பவத்திற்கு முன்னரே இறந்துவிட்டார். எனது அண்ணன் மகள் இறந்து விட்டதால் சட்டப்படி ஆஜர் எதிரிக்கு சென்றுவிட்டது என்றால் சரியல்ல. நாங்கள் எதிரியின் இடத்தை அபரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த போது போலீசார் அங்கு வரவில்லை என்றால் சரியல்ல, போலீசார் அங்கு வந்தார்கள். சம்பவத்தின் போது எனது ஊர் பஞ்சாயத்து தலைவர் சக்திவேல் அங்கு வந்தாரா என்றால் அவர் அங்கு வரவில்லை. சம்பவத்தில் சிதறி கிடந்த கடலை செடிகளை போலீசார் அங்கு வந்து எடுத்து சென்றார்களா என்றால் நாங்கள் தான் எடுத்து கொண்டு போய் போலீசாரிடம் கொடுத்தோம். எதிரி எங்களை ஆபாசமாக பேசவில்லை என்றும், அடிக்கவில்லை என்றும், கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றாலும்

சரியல்ல. நான் புகார் அளித்த போது எதிரியுடன் சுமார் 30 நபர்கள் வந்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் புகார் அளித்த போது எதிரியுடன் சுமார் 10 நபர்கள் வந்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, 30 நபர்கள் என்று தான் கூறினேன். உண்மையிலேயே சம்பவம் நடைபெற்றிருந்தால் யார் யார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்பதை தெளிவாக சொல்லியிருப்பேன் என்றால் தெளிவாக தான் சொல்லியுள்ளேன். முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிப்பதால் சம்பவம் நான் கூறுவது போல் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.